**திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) செயல்முறைகள்**

**ஆணையிடுபவர்: திரு.இரா.வில்சன் இராசசேகர், B.A.,**

ந.க.அ3/1413/2021 — நாள்:17.09.2021.

பிலவ வருடம், புரட்டாசி -01 , திருவள்ளுவர் ஆண்டு 2052.

பொருள்: பொதுப்பணி - தமிழ்நாடு அமைச்சு பணித்தொகுதி - திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலகு - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்திய 2018-2019 மற்றும் 2019-2020-ம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு - IV- மூலம் தட்டச்சர்களாக தெரிவு செய்யப்பட்டு திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

ஆட்சியர் அலுவலகம்
21 SEP 2021
2197

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.430 மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள்:12.11.2019
2. அரசாணை (நிலை) எண்.441 மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள்:15.11.2019
3. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளர் அவர்களின் கடித எண் 5526/PSD-I/2020, நாள்: 24.12.2020.
4. கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண்.பணி 4(1)/20849/2019 நாள்:12.02.2021.
5. வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ3/14/2021, நாள்:19.02.2021.
6. திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.அ3/1413/2021, நாள்:19.02.2021.
7. தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகள்

A1

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்திய 2018 - 2019 மற்றும் 2019 - 2020 -ஆம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு - IV-ன் மூலம் தட்டச்சர்களாக தெரிவு செய்யப்பட்டு, திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்க்கண்ட நபர்களுக்கு கீழ்குறிப்பிட்ட அலுவலகங்களில் பார்வை 6-இல் கண்டுள்ள செயல்முறைகளின்படி பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டு 19.02.2021 முற்பகல் முதல் பணியாற்றி வருகின்றனர்.

2) இந்நேர்வில் கீழே குறிப்பிட்டுள்ள 02 தட்டச்சர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதி முதல் இவர்களது பணியினை தமிழ்நாடு அமைச்சுப்பணியில் தட்டச்சர் பணியமைப்பில் வரன்முறை செய்தும், பணிவரன்முறை செய்த நாள் முதல் தகுதிகாண்பருவம் துவக்கியும், இவர்களது தகுதிகாண்பருவம் தொடர்ந்து 3 (மூன்று) வருட தொடர்ச்சியான காலத்திற்குள், இரண்டு வருட பணிக்காலத்தினை தகுதிகாண் பருவமாக நிர்ணயம் செய்தும் ஆணையிடப்படுகிறது.

-2-

| வ. எண் | தட்டச்சர் பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம் திருவாளர்கள் | தமிழ்நாடு அமைச்சுப்பணியில் தட்டச்சர் பணியமைப்பில் வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|
| 1. | கே.நவீனா,<br>தட்டச்சர்,<br>வட்டாட்சியர் அலுவலகம், வாணியம்பாடி. | 19.02.2021 முற்பகல் |
| 2. | ஆர்.சசிகுமார்,<br>தட்டச்சர்,<br>தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) அலுவலகம், திருப்பத்தூர். | 19.02.2021 முற்பகல் |

3) மேற்கண்ட பணியாளர்கள் தகுதிகாண்பருவ காலத்திற்குள் Certificate Course in Computer on Office Automation தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். அவ்வாறு இல்லையெனில் தமிழ்நாடு மாநில சார்நிலை விதிகளில் விதி 27-ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

4) இந்த ஆணைகள் குறித்து சம்மந்தப்பட்டவர்களின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்கள் கோரப்படுகிறார்கள்.

ஒ.ம்/-இரா.வில்சன் இராசசேகர்.,
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது)
திருப்பத்தூர்.

/உத்தரவுப்படி/

17/9/2021

அலுவலக மேலாளர் (பொது)

பெறுநர்
சம்மந்தப்பட்ட நபர்கள்

நகல்: வட்டாட்சியர், வாணியம்பாடி.
நகல்: அ3/இ1 இருக்கைக்கு